# செய்தி வெளியீடு
# பெருநகர சென்னை மாநகராட்சி

**செ.வெ.எண்.03** **நாள் : 03.01.2019**

## பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக, ''பிளாஸ்டிக் இல்லா சென்னை'' விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள். குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் சென்னை மாநகர் முழுவதும் மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக, அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் இன்று (03.01.2019) நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் 800 மாணவ, மாணவியர்களும் மற்றும் 50 ஆசிரியர்களும் பங்கு பெற்றனர். இம்முகாமில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஒருமுறை உபயோகித்து தூக்கி எறியும் பிளாஸ்டிக்கை உபயோகிப்பதால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள், அதற்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்கள் முதலியன குறித்து கண்காட்சி வைத்து விளக்கப்பட்டது. பின்னர் அனைவரும் பிளாஸ்டிக் தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மேலும், மாணவ, மாணவியர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்ட பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி CTH சாலையில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனத்திலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் வரை நடைபெற்றது. பேரணியில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றுப்பொருட்கள், விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவ, மாணவியர்கள் ஏந்தி, ஊர்வலமாக சென்று பொதுமக்கள், வியாபாரிகள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், மண்டல அலுவலர் R. பாலசுப்ரமணியன், ஐ.டி.ஐ முதல்வர். D. ரேணுகா, உதவி செயற்பொறியாளர் (தி.க.மே), பகுதி உதவி செயற்பொறியாளர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**